**10 C** Register No.

# இரண்டாம் திருப்புதல் தேர்வு – 2025

காலம் : 3.00 மணி நேரம் **தமிழ்** மதிப்பெண்கள் : 100

I) **அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.** 15x1=15

1. வேர்க்கடலை, மிளகாய் விதை, மாங்கொட்டை ஆகியவற்றைக் குறிக்கும் பயிர்வகை ........
அ) குலைவகை ஆ) மணி வகை இ) கொழுந்து வகை ஈ) இலை வகை

2. பொருந்தும் விடை வரிசையைத் தேர்ந்தெடுக்க
அ) கொண்டல் - 1) மேற்கு
ஆ) கோடை - 2) தெற்கு
இ) வாடை - 3) கிழக்கு
ஈ) தென்றல் - 4) வடக்கு
அ) 1,2,3,4 ஆ) 3,1,4,2 இ) 4,3,2,1 ஈ) 3,4,1,2

3. அறிஞருக்கு நூல், அறிஞரது நூல் ஆகிய சொற்றொடர்களில் பொருளை வேறுபடுத்தக் காரணமாக அமைவது ...........
அ) வேற்றுமை உருபு ஆ) எழுவாய் இ) உவமஉருபு ஈ) உரிச்சொல்

4. 'பெப்பர்' என்னும் இயந்திர மனிதனை உருவாக்கிய நாடு ............
அ) அமெரிக்கா ஆ) இந்தியா இ) சீனா ஈ) ஜப்பான்

5. சதாவதானம் என்பது ஒரே நேரத்தில் நிகழ்த்தப்படும் ........ செயல்களையும் நினைவில் கொண்டு விடையளித்தலே ஆகும்.
அ) ஐம்பது ஆ) நூறு இ) அறுபது ஈ) நாற்பது

6. கோசல நாட்டில் கொடை இல்லாத காரணம் என்ன?
அ) நல்ல உள்ளம் உடையவர்கள் இல்லாததால் ஆ) ஊரில் விளைச்சல் இல்லாததால்
இ) அரசன் செங்கோல் ஆட்சி புரிவதால் ஈ) அங்கு வறுமை இல்லாததால்

7. கூற்று 1 : போராட்டப் பண்புடனே வளர்ந்தவர் கலைஞர்.
கூற்று 2 : அவருக்குள் இருந்த கலைத்தன்மை வளர உதவியது.
அ) கூற்று 1 சரி 2 தவறு ஆ) கூற்று 1 மற்றும் 2 தவறு
இ) கூற்று 1 தவறு 2 சரி ஈ) கூற்று 1 மற்றும் 2 சரி

8. மாலவன் குன்றம் போனாலென்ன? வேலவன் குன்றமாவது எங்களுக்கு வேண்டும்' மாலவன் குன்றமும் வேலவன் குன்றமும் குறிப்பவை முறையே .........
அ) திருப்பதியும் திருத்தணியும் ஆ) திருத்தணியும் திருப்பதியும்
இ) திருப்பதியும் திருச்செந்தூரும் ஈ) திருப்பரங்குன்றமும் பழனியும்

9. 'வீட்டைத் துடைத்துச் சாயம் அடித்தல்' இவ்வடி குறிப்பிடுவது ..........
அ) காலம் மாறுவதை ஆ) வீட்டைத் துடைப்பதை
இ) இடையறாது அறப்பணி செய்தலை ஈ) வண்ணம் பூசுவதை

10. பத்து மடங்கு தீமை தருவது ...........
அ) பல்லார் பகை கொளல் ஆ) நல்லார் தொடர் கை விடல்
இ) கண்ணோட்டம் இன்மை ஈ) நாகரிகம் இன்மை

11. பருவக்காற்றின் பயனை உலகுக்கு உணர்த்திய கிரேக்க அறிஞர் ........
அ) ஹிப்பாலஸ் ஆ) ஸ்டீபன் ஹாக்கிங் இ) ஐன்ஸ்டீன் ஈ) அரிஸ்டாட்டில்

பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு (12,13,14,15) விடை தருக.

ஓங்கு தண் பணைசூழ் நீப வனத்தை நீத்து ஒரு போதேனும்
நீங்குவம் அல்லேம் கண்டாய் ஆயினும் நீயும் வேறு
தீங்கு உளை அல்லை காடன் செய்யுளை இகழ்தலாலே
ஆங்கு அவன் இடத்தில் யாம் வைத்த அருளினால் வந்தேம் என்னா



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

12. நீபவனம் என்பதன் பொருள் .............
அ) பாலைவனம் ஆ) நீண்டவனம் இ) மலர்வனம் ஈ) கடம்பவனம்
13. இப்பாடல் இடம்பெற்ற நூல் எது?
அ) நீதிவெண்பா அ) கம்பராமாயணம் இ) சிலப்பதிகாரம் ஈ) திருவிளையாடற் புராணம்
14. இப்பாடலின் ஆசிரியர் யார் ?
அ) பரஞ்சோதி முனிவர் ஆ) குலசேகர ஆழ்வார்
இ) செய்குத் தம்பிப்பாவலர் ஈ) இளங்கோவடிகள்
15. 'இகழ்தல்' என்பதன் இலக்கணக் குறிப்பு ........
அ) வேற்றுமைத் தொகை ஆ) தொழிற்பெயர்
இ) பெயரெச்சத் தொடர் ஈ) பண்புப் பெயர்

## பகுதி - II (பிரிவு - 1)

**II. எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடையளி (21ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்) 4x2=8**

16. விடைகளுக்கேற்ற வினா அமைக்க.
அ) பாட்டுக்கொரு புலவன் எனப் பாராட்டப்பட்டவர் பாரதியார்.
ஆ) தீவக அணி முதல்நிலைத் தீவகம், இடைநிலைத் தீவகம், கடைநிலைத் தீவகம் என மூன்று வகையாக வரும்.
17. வசன கவிதை குறிப்பு வரைக.
18. செய்குதம்பிப் பாவலரின் கல்வி பற்றிய கருத்தினை முழக்கத் தொடர்களாக்குக.
19. வறுமையின் காரணமாக உதவி கேட்டு வருபவரின் தன்மானத்தை எள்ளி நகையாடுவது குறித்து குறளின் கருத்து என்ன?
20. குறிப்பு வரைக : அவையம்.
21. விடல் - என முடியும் திருக்குறளை அடிபிறழாமல் எழுதுக.

## பிரிவு - 2

**III. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க 5x2=10**

22. இரு சொற்களையும் ஒரே தொடரில் அமைத்து எழுதுக.
அ) விடு-வீடு ஆ) சிலை - சீலை
23. தொடரில் விடுபட்ட வண்ணங்களை உங்களின் எண்ணங்களால் நிரப்புக.
அ) வெயிலில் அலையாதே; உடல் ............
ஆ) அனைவரின் பாராட்டுகளால், வெட்கத்தில் பாடகரின் முகம் ..............
24. பகுபத உறுப்பிலக்கணம் தருக : மயங்கிய
25. கலைச்சொற்கள் தருக : அ) Belief - ஆ) Aestheties -
செவி மாற்றுத்திறனாளருக்கான வினா
கீழ்க்காணும் சொற்களின் கூட்டப்பெயர்களை எழுதுக. அ) புல் ஆ) பழம்
26. கீழ்வரும் தொடர்களில் பொருந்தாத கருப்பொருளைத் திருத்தி எழுதுக.
அ) உழவர்கள் மலையில் உழுதனர்
ஆ) முல்லைப் பூச்செடியைப் பார்த்தவாறே பரதவர் கடலுக்குச் சென்றனர்.
27. தனிச்சொற்றொடர்களைக் கலவைச் சொற்றொடராக மாற்றுக.
அ) அழைப்புமணி ஒலித்தது. கயல்விழி கதவைத் திறந்தாள்
28. ஊர்ப்பெயர்களின் மரூஉவை எழுதுக.
அ) புதுக்கோட்டை ஆ) கும்பகோணம்

## பகுதி - III (பிரிவு - I)

**IV. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க. 2x3=6**

29. ஜெயகாந்தன் தம் கதைமாந்தர்களின் சிறந்த கூறுகளைக் குறிப்பிடத் தவறுவதில்லை என்று அசோகமித்திரன் கூறுகிறார். இக்கூற்றை மெய்ப்பிக்கும் செயல் ஒன்றைத் 'தர்க்கத்திற்கு அப்பால்' கதை மாந்தர் வாயிலாக விளக்குக.
30. தமிழ்மொழிக்காகக் கலைஞர் செய்த சிறப்புகளுள் நீங்கள் அறிந்துகொண்ட இரண்டினை எழுதுக.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

31. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளி

திருமூலர் தம் திருமந்திரத்தில் மூச்சுப்பயிற்சியே உடலைப் பாதுகாத்து வாழ்நாளை நீட்டிக்கும் என்று கூறியுள்ளார். பிற்கால ஔவையார் தம் குறளில் வாயுதாரணை எனும் அதிகாரத்தில், 'வாயு வழக்கம் அறிந்து செறிந்தடங்கில் ஆயுள் பெருக்கம் உண் டாம்'- என்று காற்றைச் சிறப்பித்துள்ளார்.

அ) மூச்சுப்பயிற்சியே வாழ்நாளை நீட்டிக்கும் என்று கூறியவர் யார் ?

ஆ) 'வாயு வழக்கம்' என்ற குறளை எழுதியவர் யார்?

இ) இப்பத்தியில் எதைப் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது?

**பிரிவு - 2**

V. **எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க (34வது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்)** **2x3=6**

32. தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு சுட்டுவன யாவை?

33. வாளித் தண்ணீர், சாயக் குவளை, கந்தைத் துணி, கட்டைத் தூரிகை - இச்சொற்களைத் தொடர்புபடுத்தி ஒரு பத்தி அமைக்க.

34. அடிபிறழாமல் எழுதுக

அ) 'அருளைப் பெருக்கி' எனத் தொடங்கும் நீதிவெண்பாப்பாடல் (அல்லது)

ஆ) 'மாற்றம் எனது' எனத் தொடங்கும் காலக்கணிதம் பாடலை எழுதுக.

**பிரிவு - 3**

VI. **எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க.** **2x3=6**

35. வேலொடு நின்றான் இடுஎன்றது போலும்
கோலொடு நின்றான் இரவு - குறளில் பயின்று வரும் அணியை விளக்குக.

36. அறிந்தது, அறியாதது, புரிந்தது, புரியாதது, தெரிந்தது, தெரியாதது, பிறந்தது, பிறவாதது இவை அனைத்தையும் யாம் அறிவோம். இக்கூற்றில் உள்ள வினைமுற்றுகளைத் தொழிற்பெயர்களாக மாற்றி எழுதுக.

37. அலகிட்டு வாய்பாடு தருக.

குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்
சுற்றமாச் சுற்றும் உலகு.

**பகுதி - IV** **5x5=25**

38. அ) ஆற்றுப்படுத்துதல் என்பது அன்றைக்குப் புலவர்களையும் கலைஞர்களையும், வள்ளல்களை நோக்கி நெறிப்படுத்துவதாக இருந்தது. அது இன்றைய நிலையில் ஒரு வழிகாட்டுதலாக மாறியிருப்பதை விளக்குக. (அல்லது)

ஆ) சிலப்பதிகார மருவூர்ப்பாக்க வணிக வீதிகளை இக்கால வணிக வளாகங்களோடும், அங்காடிகளோடும் ஒப்பிட்டு எழுதுக.

39. அ) உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும், விலை கூடுதலாகவும் இருந்தது குறித்து உரிய சான்றுகளுடன் உணவுப் பாதுகாப்பு ஆணையருக்குக் கடிதம் எழுதுக.

(அல்லது)

ஆ) பெருந்தொற்று ஏற்படுவதைத் தடுக்கத் தேவையான முன்னெச்சரிக்கைகளை விவரித்துச் சிற்றூரில் உள்ள உங்களது தாத்தா பாட்டிக்குக் கடிதம் ஒன்றை எழுதுக.

40. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.





Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

41. வீட்டு எண்: 5, நேரு நகர், நீலகிரி மாவட்டத்தில் வசிக்கும் தமிழரசுவின் மகள் பூங்கொடி, கணினி பயிற்றுநர் பணி வேண்டி தன்விவரப் பட்டியலை நிரப்புகிறார். தேர்வர் தன்னை பூங்கொடியாகப் பாவித்து பணி வாய்ப்பு வேண்டி தன்விவரப் பட்டியல் படிவத்தை நிரப்புக.

42. அ) மொழிபெயர்க்க

Among the five geographical divisions of the Tamil Country in Sangam literature, the Marutam region was fit for cultivation, as it had the most fertile lands. The property of a farmer depended on getting the necessary sunlight, Seasonal rains and the fertility of the soil. Among these elements of nature, sunlight was considered indispensable by the ancient Tamils.

செவிமாற்றுத் திறனாளர்களுக்கான மாற்றுவினா

அ) உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

அரசனது மெய்ப்புகழை எடுத்துக்கூறுவது மெய்கீர்த்தி, பொதுவாக இது சோழ மன்னருடைய சாசனங்களின் தொடக்கத்தில் அரசனுடைய இத்தனையாவது ஆட்சியாண்டு என்று கூறுமிடத்து அமைக்கப்பெறும். சிறப்பாக அவனுடைய போர் வெற்றிகளையும் வரலாற்று முறையையும் கூறி அவன் தன் தேவியோடு வீற்றிருந்து நீடு வாழ்க எனக் கூறி பிறகே சாசனம் எழுந்த நிகழ்ச்சியைக் குறிப்பிடும். சோழ மன்னர் பரம்பரையில் மெய்க்கீர்த்தியோடு சாசனங்களைப் பொறிக்கும் வழக்கம் நெடுநாள் இருந்ததில்லை.

வினாக்கள்:-

1. மெய்க்கீர்த்தி என்றால் என்ன?
2. மெய்க்கீர்த்தியில் சிறப்பாக எழுதுவது என்ன?
3. தொடக்கத்தில் யாருடைய சாசனங்களில் ஆட்சியாண்டு கூறப்பட்டது?
4. மெய் கீர்த்தியோடு சாசனங்களைப் பொறிக்கும் வழக்கம் எந்த மன்னர் பரம்பரையில் இருந்தது?
5. இவ்வுரைப் பத்திக்குப் பொருத்தமான தலைப்பு ஒன்றைத் தருக.

(அல்லது)

ஆ) தமிழ், தமிழர், தமிழ்நாடு என்று வாழ்ந்து மறைந்தவர் கலைஞர், அவர் எழுதியது தமிழின் சுவையை; அவர் எண்ணியது தமிழரின் உயர்வை; அவர் உயத்தியது தமிழ்நாட்டின் கலைகளை! நீங்கள் படித்து முடித்தபின் உங்கள் துறையின் அறிவைக்கொண்டு தமிழுக்குச் செய்யக்கூடிய தொண்டுகளை வரிசைப்படுத்துக.

## பகுதி - V

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.** **3x8=24**

43. அ) சங்ககாலத்து அறங்கள் இன்றும் தேவையே என்பதற்கு எடுத்துக்காட்டுகள் தந்து விரிவாக விளக்குக.

(அல்லது)

ஆ) இறைவன், புலவர் இடைக்காடன் குரலுக்குச் செவிசாய்த்த நிகழ்வை நயத்துடன் எழுதுக.

44. அ) கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சைபுகினும் கற்கை நன்றே'' என்கிறது வெற்றி வேற்கை. மேரியிடமிருந்து பறிக்கப்பட்ட புத்தகம், அச்சிறுமியின் வாழ்க்கையில் கல்விச்சுடரை ஏற்றிய கதையைப் பற்றிய உங்களின் கருத்துகளை விவரிக்க.

(அல்லது)

ஆ) 'பாய்ச்சல்' கதையில் அழகு தன்னைமறந்து ஆடியதைப் போன்று உங்கள் தெருக்களில் நீங்கள் கண்டு மகிழ்ந்த பகல்வேடக் கலைஞரைக் குறித்து அழகுற விளக்கி எழுதுக.

45. அ) குமரிக் கடல்முனையையும் வேங்கட மலை முகட்டையும் எல்லையாகக் கொண்ட தென்னவர் திருநாட்டிற்குப் புகழ் தேடித்தந்த பெருமை தகைசால் தமிழன்னையைச் சாரும். எழில்சேர் கன்னியாய் என்றும் திகழும் அவ்வன்னைக்கு, பிள்ளைத் தமிழ் பேசி, சதகம் அமைத்து, பரணிபாடி, கலம்பகம் கண்டு, உலாவந்து அந்தாதி கூறி, கோவை யாத்து, அணியாகப் பூட்டி அழகூட்டி அகம்மிக மகிழ்ந்தனர் செந்நாப் புலவர்கள். இக்கருத்தைக் கொண்டு 'சான்றோர் வளர்த்த தமிழ்' என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.

(அல்லது)

ஆ) 'சுற்றுச்சூழல் பாதுகாப்பு' என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com